රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information

**2026.09.14 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. 'Disrupt Asia – 2026' தொழிநுட்ப மாநாடு மற்றும் புத்தாக்க விழாவை நடாத்துதல்**

டிஜிட்டல் பொருளாதார அமைச்சு மற்றும் GovTech Srilanka (Pvt) Ltd ஆகியவற்றால் 'Disrupt Asia – 2026' எனும் தேசிய தொழிநுட்ப மாநாடு மற்றும் புத்தாக்க விழாவை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. முயற்சியாண்மை தொடக்கப் போட்டி, பல்வேறு தலைப்புக்களின் கீழான அமர்வுகள், கண்காட்சி வலையமைப்பாக்கல் நிகழ்வு மற்றும் ஏனைய இணைந்த நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கிய இரண்டு நாள் நிகழ்ச்சியாக குறித்த மாநாடு மற்றும் விழாவை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்காக அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், தனியார் துறையினர், கைத்தொழில்துறையினர், கல்வியியலாளர்கள், அபிவிருத்திப் பங்குதாரர்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் உள்ளடக்கிய பல பிரதான தரப்பினர்கள் பங்குபற்றவுள்ளனர். 'Disrupt Asia – 2026' மாநாடு மற்றும் விழாவை நடாத்துவதற்காக டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் மூலோபாய பங்குதாரராக செயலாற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் இலங்கை அலுவலகம் தமது விருப்பத்தையும் தயார்நிலையையும் தெரிவித்துள்ளது. அதற்கமைய, ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் இலங்கை அலுவலகத்தின் மூலோபாய பங்குதாரராக இணைத்துக்கொண்டு 'Disrupt Asia – 2026' தேசிய தொழிநுட்ப மாநாடு மற்றும் புத்தாக்க விழாவை நடாத்துவதற்கு டிஜிட்டல் பொருளாதார அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. 'சிறுவர் தின தேசிய வாரத்தை' பிரகடனப்படுத்தல்**

பிள்ளைகளின் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் நல்லாரோக்கியம் தொடர்பாக சமூகக் கவனத்தை மேலும் பலப்படுத்தும் நோக்கில் இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. சமகாலத்தில் பிள்ளைகள் முகங்கொடுக்கின்ற மரபு ரீதியான சிறுவர் பாதுகாப்புப் பிரச்சினைகளையும் கடந்து இணையவழி ஊடாகவும் மற்றும் டிஜிட்டல் தொழிநுட்ப இடர் நிலைமைகள் வரைக்கும் விரிவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பிள்ளைகள் மாத்திரமன்றி பெற்றார்கள், ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், சேவை வழங்குநர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பிள்ளைகளுடன் தொடர்ச்சியாக இணைந்து அனைத்துத் தரப்பினர்களின், சிறுவர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுகளை விருத்தி செய்வதற்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதனால், சிறுவர் உரிமைகள் தொடர்பாக பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரித்தல், பிள்ளைகள் தொடர்பாக சமூகக் கூருணர்வை விருத்தி செய்தல் மற்றும் சிறுவர் பாதுகாப்புக்கு சமுதாயப் பங்கேற்பை அதிகரிக்கும் நோக்கில் சிறுவர் தின தேசிய நிகழ்வுக்கு இணையாக சிறுவர் தின தேசிய வாரத்தைப் பிரகடனப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, 2026.09.25 தொடக்கம் 2026.10.01 வரையான காலப்பகுதியை 'சிறுவர் தின தேசிய வாரம் - 2026' பிரகடனப்படுத்தி விசேட வேலைத்திட்டமாக அமுல்படுத்துவதற்கு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු තො T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

**03. மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்டத்திற்கு நிதி சட்டகமாக்கல் SAARC பயிற்சி செயலமர்வுக்கான உபசரிப்பு**

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு சங்கத்தின் (SAARC) வலுசக்தி நிலையத்தால் 2026.10.05 தொடக்கம் 2026.10.07 வரையான காலப்பகுதியில் 'மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்டத்திற்கான நிதி சட்டகமாக்கல்' எனும் தொனிப்பொருளின் கீழ் பயிற்சி மாநாட்டை கொழும்பில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சி மாநாட்டுக்கு இலங்கை உள்ளிட்ட SAARC உறுப்பு நாடுகளிலிருந்து இரண்டு பேர் வீதம் பங்குபற்றவுள்ளனர். தெற்காசிய பிராந்திய ஒத்தழைப்பு சங்கத்தின் வலுசக்தி நிலையத்தால் விமானச் சீட்டுக்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து உள்நாட்டு உபசரிப்பு வசதிகள் மற்றும் விமான நிலையத்திற்கு போக்குவரத்து வசதிகள் வழங்கப்படவுள்ளது. மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் கருத்திட்ட மதிப்பீடு மற்றும் நிதி சட்டகமாக்கல் தொடர்பாக அரச அலுவலர்களின் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினர்களின் இயலளவு விருத்திக்கு முக்கியமான இப்பயிற்சி வேலைத்திட்டம் தொடர்பாக வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொள்ளப்பட்டு, குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு இலங்கை உபசரிப்பு செய்வதற்கு அமைச்சரவையின் உடன்பாட்டை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**04. பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கத்தின் 08 ஆவது ஆசிய பிராந்தியத்தின் மாநாடு மற்றும் பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கத்தின் ஆசியா மற்றும் பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கத்தின் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தின் 03 ஆவது ஒருங்கிணைந்த மாநாட்டை நடாத்துவதற்கான உபசரிப்பு வழங்கல்**

பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கத்தின் 08 ஆவது ஆசிய பிராந்திய மாநாடு மற்றும் பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கத்தின் ஆசிய மற்றும் பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கத்தின் தென்கிழக்காசிய பிராந்திய 03 ஆவது ஒருங்கிணைந்த மாநாடு 2027 ஆம் ஆண்டில் ஏப்ரல்/மே மாதங்களில் மூன்று நாட்கள் கொழும்பில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த மாநாட்டில் ஆசிய மற்றும் தென்கிழக்காசிய பிராந்தியங்களில் அமைந்துள்ள பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கத்தின் உறுப்பு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சபாநாயகர்கள், பிரதி சபாநாயகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற அலுவலர்கள் உள்ளிட்ட 90 பிரதிநிதிகள் பங்குபற்றவுள்ளனர். பாராளுமன்ற இராதந்திர நிலைமைகள் மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்தல் மற்றும் பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கத்தில் இலங்கை பாராளுமன்றத்தின் சர்வதேச அங்கீகாரத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களைக் கருத்தில் கொண்டு, குறித்த மாநாட்டை இலங்கையில் நடாத்துவதற்கு இலங்கை பாராளுமன்றத்தால் உபசரிப்புக்களை மேற்கொள்வதற்கு கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. நெல் கொள்வனவு செய்வதற்கு நெல்சந்தைப்படுத்தல் சபைக்கு மேலதிக நிதியொதுக்கீடு செய்தல்**

2026 ஆம் ஆண்டில் சிறுபோகத்தில் நெல் சந்தைப்படுத்தல் வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் 6,000 மில்லியன் ரூபாய்கள் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த நிதியைப் பயன்படுத்தி நெல் சந்தைப்படுத்தல் சபை நெல் கொள்வனவு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆயினும், அநுராதபுரம், பொலன்னறுவை, புத்தளம், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மற்றும் மகாவலி B, C மற்றும் H வலயங்களில் நெல் அறுவடை இன்னுமே முடிவடையாமையால், அப்பிரதேசங்களில் நெல் கொள்வனவுக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதாமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதனால், 2026 சிறுபோக நெல் அறுவடையைக் கொள்வனவு

செய்வதற்கான துரித வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள 7,500 மில்லியன் ரூபாய்களை மேலதிக நிதியில் மேலும் 2,500 மில்லியன் நிதியை, ஈடு செய்யும் அடிப்படையில் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்குவதற்காக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. தெரிவு செய்யப்பட்ட பிரதான குளங்களுக்குச் சொந்தமான எல்லைகள் மற்றும் பாதுகாப்பு பிரதேசங்களைப் பாதுகாக்கும் கருத்திட்டத்தை தொடர்ந்தும் அமுல்படுத்தல்**

சமகாலத்தில் காணிப் பயன்பாட்டுப் போக்குகளுக்கமைய பாதிப்புக்குள்ளாகியுள்ள நீர்மூலங்களைப் பாதுகாக்கும் ஒருபடிமுறையாக நீர்ப்பாசன திணைக்களத்தின்கீழ் நிர்வகிக்கப்படுகின்ற பிரதான குளங்களில் எல்லைகள் இத்திணைக்களத்தின் எல்லைக்கற்கள் இட்டு திட்டவட்டமாக நிலத்தை அடையாளப்படுத்துவதற்கு 'க்ளீன் ஸ்ரீலங்கா' கருத்திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டில் ஏற்புடைய கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 100 மில்லியன் ரூபாய்களைப் பயன்படுத்தி நீர்ப்பாசன திணைக்களத்தின் மூலம் கருத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக 2025.06.16 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, பல்வேறு பாதிப்புக்களுக்குள்ளாகி, தற்போது தெரிவு செய்யப்பட்ட 21 குளங்களின் பணிகள் 2025 ஆம் ஆண்டில் ஆரம்பித்துள்ளதுடன், நுவர வாவி, கந்தளாய் குளம் மற்றும் திஸ்ஸ வாவி போன்ற 03 குளங்கள் உள்ளிட்ட எல்லைகளை குறியீடு செய்து, எல்லைக் கற்களை இடுகின்ற பணிகள் அவ்வாண்டிலேயே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற கருத்திட்ட யோசனையில் உள்வாங்கப்பட்ட 48 குளங்களின் பணிகள் ஆரம்பிக்கப்படாத எஞ்சிய பணிகளை அடுத்துவரும் ஆண்டுகளில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, எஞ்சிய குளங்களின் நில அளவைப் பணிகளை மேற்கொள்ளல், எல்லைக் கற்களை தயாரித்தல் மற்றும் பொருத்துதல் மற்றும் மரநடுகை உள்ளிட்ட 2025 – 2028 காலப்பகுதிக்கான ஒட்டுமொத்த கருத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவாக 400 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை தொடர்ந்தும் நீர்ப்பாசன திணைக்களத்தின் ஊடாக அமுல்படுத்துவதற்கு கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. முதுன் கால்வாய் மழைநீர் வழிந்தோடுதல் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்**

முதுன் கால்வாய் உப நீரேந்து வலயத்திற்குரிய பேலியகொட மற்றும் களனி பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் மழைநீர் வழிந்தோடும் பிரச்சினையைத் தணிக்கும் நோக்கில் 'முதுன் கால்வாய் மழைநீர் வழிந்தோடுதல் மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் கருத்திட்டத்தை' அமுல்படுத்துவதற்கு இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் முன்மொழியப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரகத்தால் (JICA) மேற்கொள்ளப்பட்டுள்ள முதுன் கால்வாய் ஆற்றுப்படுக்கை வலயத்தில் முன் சாத்தியவள ஆய்வு மற்றும் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதுன் கால்வாய் ஆற்றுப்படுக்கை சாத்தியவள ஆய்வை அடிப்படையாகக் கொண்டு, உத்தேச திட்டம் தயாரிக்கப்பட்டுள்ள. மேற்குறிப்பிட்ட திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் முதுன் கால்வாய் உப நீரேந்துப் பிரதேசத்தில் நிலவும் மழைநீர் வழிந்தோடல் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதற்கும், அதன்மூலம் தற்போது அமுல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், பொருளாதார செயற்பாடுகள் தொடர்பாக நீர் வழிந்தோடுவதால் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் சேதங்களைத் தணிப்பதற்கும், தொடர்ந்துவரும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குத் தேவையான காணிகளை விடுவிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. 46,190.6 மில்லியன் ரூபாய்கள் செலவு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்தச்

செலவில் முதுன் கால்வாய் மழைநீர் வழிந்தோடல் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தும் திட்டத்தை - 2027 – 2036 காலப்பகுதியில் கட்டம் கட்டமாக அமுல்படுத்துவதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. பிலியந்தல – கெஸ்பாவ குறுக்கு வீதிக்கு அருகிலுள்ள மழைநீர் வழிந்தோடல் கட்டமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தும் திட்டம்**

வயல் காணிகளை நிரப்பி பிலயந்தல – கெஸ்பாவ குறுக்கு வீதி (வீதி இலக்கம் 120) நிர்மாணம், பிலியந்தல நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பிலியந்தல பேரூந்து நிலைய நிர்மாணம் போன்ற கடந்த தசாப்தத்தில் பிலியந்தல பிரதேசத்தை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நகரமயமாக்கல் செயற்பாடுகள் காரணமாக குறித்த பிரதேசத்தின் இயற்கை நீர் வழிந்தோடல் போக்குக்கு பாதகமாக தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறு தாழ்நிலங்கள் நிரப்பப்படுவதால் நிலத்தின் இயற்கை நீர்ப்பிடிப்புக் கொள்ளளவு கணிசமானளவு குறைவடைந்து மேற்புறத்தில் நீர் வழிந்தோடுதல் அதிகரித்தமை மற்றும் சிறிய மழைக்குக் கூட வெள்ள நிலைமை ஏற்படுகின்றது. எனவே தற்போதுள்ள வடிகான கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஆற்றங்கரைகளை செப்பனிடுதல், தற்போதுள்ள போக்குகளைப் புனரமைத்தல் மற்றும் புதிதாக நிர்மாணித்தல் மற்றும் நீர் தேங்கும் பிரதேசத்தை அமைத்தல், பிரதேசத்திலுள்ள சுற்றாடல் கூருணர்வுமிக்க வலயங்களை ஈரநிலப் பிரதேசங்களாக அறிமுகப்படுத்துவதற்காக பிலியந்தல – கெஸ்பாவ குறுக்குப் பாதை சார்ந்த தாழ்நிலப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள மழைநீர் வழிந்தோடும் கட்டமைப்பு மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. திக்வெல்ல பேருவள மழைநீர் வழிந்தோடும் தொகுதி மற்றும் பொது வசதிகளை மேம்படுத்தல் கருத்திட்டம்**

திக்வெல்ல நகருக்கு அண்மையில் அமைந்துள்ள பகுதி நகரப் பிரதேசமாகவுள்ள வெவுறுகன்னல பிரதேசம் தொடர்ச்சியாக வெள்ள நிலைமை ஏற்படுகின்றது. பேருவள எனும் சதுப்புநிலத்தை நிரப்புதல் மற்றும் சன்டிஸ் கால்வாய் எனும் பெயரிலான பிரதான கால்வாயின் இருபுறமும் முறையற்ற நகரமயமாக்கலால் கால்வாய் குறுகியமையால் சரியான வகையில் நீர் வழிந்தோடாமையே இப்பிரச்சினைக்குப் முக்கிய காரணமாக அமைகின்றது. இந்நிலைமையின் அடிப்படையில் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் ஏற்புடைய பிரதேசத்தில் நீர் விஞ்ஞான கற்கை மேற்கொண்டு வடிகாலமைப்புத் தொகுதியை மேம்படுத்துவதற்குத் தேவையான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய, குறித்த நிறுவனத்திற்கு அத்திட்டங்களுக்குரிய தகுந்த விதந்துரைகள் மற்றும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய, திக்வெல்ல பேருவள மழைநீர் வழிந்தோடும் வடிகாலமைப்புத் தொகுதி மற்றும் பொது வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தை 2,946 மில்லியன் ரூபாய்கள் செலவு மதிப்பீட்டின் கீழ் 2027 – 2030 காலப்பகுதியில் அமுல்படுத்துவதற்கும், அதன்கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்வதற்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- பேருவள தாழ்நிலங்கள் 14 ஏக்கர்கள் அளவில் பிரதேசமொன்று நீர் தேங்கும் பிரதேமாக (குளமாக) மீள்கட்டமைத்தல்
- இக்குளத்தில் 1.8 கிலோமீற்றர் அளவு நீளம் கொண்ட குளக்கட்டு பெரஹர மாவத்தை மற்றும் பொதுமக்களுக்கான நடைபாதையாக நிர்மாணித்தல்

- இப்பிரதேசத்தில் சேர்கின்ற மழைநீர் சதுப்பு நிலத்திலிருந்து வாவி வரைக்கும் செல்கின்ற சன்டிஸ் கால்வாய் விரிவாக்கி பராமரிப்பு வீதியுடன் கூடிய களப்பு வரைக்கும் அபிவிருத்தி செய்தல்
- உப கால்வாய் வீதியாக உத்தேச குளத்திலிருந்து பெலியத்த மாற்று வீதியின் ஊடாக வாவி வரைக்குமான புதிய கால்வாய் வீதியை அமைத்தல் மற்றும் ஏனைய இரண்டாம் நிலை கால்வாய் வீதியை அமைத்தல்
- கால்வாய் ஊடாக காணப்படுகின்ற வீதிக்கான வடிகான் போக்கு மற்றும் குளத்தை அண்டிய வடிகான் போக்குகளை மேம்படுத்தல்
- உத்தேச நீர்த்தேக்கத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தின் தேவைகளுக்கமைவாக பொது வசதிகளை அபிவிருத்தி செய்தல்

**10. ப்ளக்பூல் - அம்பேவெல – பட்டிபொல ஹோட்டன் சமவெளி (B512) (5 + 200 கிலோமீற்றர் தொடக்கம் 12 + 000 கிலோமீற்றர் வரை) வீதியை புனரமைத்தல்**

2025 நவம்பர் மாத இறுதியில் இலங்கையில் ஏற்பட்ட தித்வா புயல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ப்ளக்பூல் - அம்பேவெல – பட்டிபொல ஹோட்டன் சமவெளி (B512) (5 + 200 கிலோமீற்றர் தொடக்கம் 12 + 000 கிலோமீற்றர் வரை) வீதியை புனரமைப்பதற்காக தேசிய போட்டி விலைமுறிக் கோரல் முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 04 விலைமனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர் உயர்மட்ட பெறுகைக் குழுவால் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகளின் அடிப்படையில் கணிசமானளவு பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s Asset Engineering (Pvt) Limited இற்கு 791.68 மில்லியன் ரூபாய்களுக்கு (வரி இல்லாமல்) வழங்குவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானக் கம்பனிக்கு உலகளாவிய வலையமைப்பு உட்கட்டமைப்பு வசதிச் சேவைகளை வழங்கும் ஒப்பந்தத்தை வழங்குதல்**

விமான சேவை பயணிகள் முறைமை, வெளிச் செல்லல் கட்டுப்பாட்டு முறைமை, விமானப் பயணச்சீட்டுக்களை ஒதுக்குதல் மற்றும் ஆசன ஒதுக்கீட்டு முறைமை, பண்டங்கள் முகாமைத்துவ முறைமை மற்றும் விமான நிலைய தொழிற்பாட்டு முறைமை உள்ளிட்ட விமான பயண சேவைகளில் மிகவும் முக்கியமான முறைமைகளுக்கிடையிலான தொடர்புகளுக்கு பாதுகாப்பாக, தாங்குதிறன் கொண்ட மற்றும் உயர் வினைத்திறனான உலகளாவிய வலையமைப்பு உட்கட்டமைப்பு வசதித் தளம் தேவையாகும். அதற்கமைய, வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானக் கம்பனிக்கு குறித்த சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்த காலம் முடிவடைவதால், புதிய சேவை வழங்குநரைத் தெரிவு செய்வதற்காக சர்வதேச போட்டி விலைமுறிக்கோரல் முறைமையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக ஒரு விலைமனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அதுதொடர்பாக உயர்மட்ட நிரந்தர பெறுகைக் குழுவின் விதந்துரையின் அடிப்படையில் கணசமான பதிலளிப்பை வழங்கியுள்ள ஒரேயொரு விலைமனுதாரரான SITA Switzerland SARL இற்கு 2026.10.01 ஆம் திகதி தொடக்கம் 2031.09.31 ஆம் திகதி வரையான ஐந்தாண்டு காலத்திற்கு 4.01 மில்லியன் அமெரிக்க டொலர் தொகைக்கு வரையறுக்கபட்ட கம்பனிக்கு உலகளாவிய வலையமைப்பு உட்கட்டமைப்பு வசதிச் சேவைகளை வழங்கும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

12. **பொதுச் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கு சுகாதார துறையின் கருத்திட்டத்தை அமுல்படுத்தல்**

அதிகரித்து வரும் மக்களுடைய சுகாதார சேவைகள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மருத்துவமனை உள்ளிட்ட அரசின் பெரும்பாலான சுகாதார சேவைகள் நிறுவனங்களில் அடையாளங் காணப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்தல் மற்றும் அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் நவீன சுகாதார தரநிர்ணயங்களுக்கு ஏற்புடைய வகையில் வசதிகளை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்ட அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்ட முன்மொழிவுகளிலிருந்து 41 திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் 2027 ஆம் ஆண்டில் ஆரம்பித்து அமுல்படுத்துவதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் விதந்துரை வழங்கப்பட்டுள்ளது. 2027 – 2031 காலப்பகுதிக்குரிய அரச முதலீட்டு வேலைத்திட்டத்திற்கு குறித்த திட்ட முன்மொழிவுகள் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட திட்டங்களில் 39 திட்டங்களைக் கருத்தில் கொண்டு, 2027 ஆம் ஆண்டு பாதீட்டின் மூலம் நிதியொதுக்கீடு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட 39 திட்டங்களை அமுல்படுத்துவதற்காக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

13. **கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான வியாபாரமொன்றை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்னிலை வர்த்தகமாகப் பெயரிடல்**

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழச் சட்டத்தின் வியாபாரமொன்றை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்னிலை வர்த்தகமாகப் பெயரிடுதல் மற்றும் அவ்வாறான வர்த்தகங்களுக்கு விடுவிப்பு வழங்குதல் அல்லது ஊக்குவிப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் தேவையாகும். அதற்கமைய, செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்னிலை வர்த்தகமாக பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பிறைம் மெல்வா (பிறைவெட்) லிமிட்டட் இனால் எதிர்வரும் ஒருசில ஆண்டுகளில் 112.2 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் 15.9 பில்லியன் இலங்கை ரூபாய்கள் முதலீடு செய்வதற்கும், கொழும்பு துறைமுக நகரத்தில் திருப்புமுனை கலப்புப் பயன்பாட்டு நீர்முனை அபிவிருத்திக் கருத்திட்டத்தை (Landmark mixed – used waterfront project) அமுல்படுத்துவதற்கும், அதன்மூலம் 800 பேருக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, பிறைம் மெல்வா (பிறைவெம்) லிமிட்டட் இற்கு கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் கடைப்பிடித்து உத்தேச விடுவிப்புக்கள் மற்றும் ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கும், குறித்த வர்த்தகத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்னிலை வர்த்தகமாகப் பெயரிடுவதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

14. **2027 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டு சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

2027 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டு சட்ட மூலத்தை தயாரிப்பதற்கு 2026.06.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள 2027 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர்

பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**